Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (26-10-65) இதழ் 256

விசுவாவசு ஐப்பசி 10 ஜ: ஆகிர் பிறை 30 செவ்வாய்க்கிழமை

முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் நீல சோப்

தற்பொழுது

புதிய ரசாயனப் பொருட்கள்

சேர்க்கப்பட்டு

பெரிய சைஸ் கட்டியாக

தயாரிக்கப்படுகின்றது.

20 சதத்திற்கு எங்கும் கிடைக்கும்.

கூடிய உடுப்புகளை சலவை செய்யலாம்.

### ஐந்தாண்டு திட்டம்

பம்பலப்பிட்டி, திங்கள்

அடுத்த வருட ஆரம்பத்தில் அமுலுக்குவரவிருக்கும் புதிய ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் திட்டங்களை தயாரித்து முடிப்பதில் இலாகாக்களும், கார்ப்பரேஷன்களும் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றன.

திட்ட அமைச்சுக்கு இந்த நகல் திட்டங்கள் சமர்ப்பிக்கப்படுமுன்' அந்தந்தஅமைச்சுகள் அந்த நகல்பற்றி ஆராய்ந்தபின்னரே அங்கீகரிக்கும். (6ம்பக்கம் பார்க்க)

# காஷ்மீர் உள் விவகாரம்?

## ஐ. நா. விவாதித்தால் இந்தியா கலந்துகொள்ளாது என அறிவிப்பு

### பாகிஸ்தான் முயற்சிக்கு இந்தியா நிபந்தனை

நியுயோர்க், அக். 25

பாகிஸ்தானின் கோரிக்கையைத் தொடர்ந்து கூட்டப்படும் ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபைக் கூட்டத்தில், காஷ்மீரின் உள்விவகாரம் விவாதிக்கப்படுமானல் இக்கூட்டத்தில் இந்தியா நிச்சயமாகக் கலந்துகொள்ளமாட்டாது என்று ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்டுக்கு இந்தியா அறிவித்துள்ளது,

இது சம்பந்தமான இந்தியாவின்குறிப்பொன்றை ஐ. நா.விலுள்ள இந்தியப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி நேற்றிரவு ஐ. நா. பந்தோபஸ்துசபைத் தலைவரிடம் சேர்ப்பித்தார்.

புதிய கூட்டமொன்றைக் கூட்டுமாறு ஐ. நா. தலைமைக்காரியதரிசிக்கு பாகிஸ்தான் கோரிக்கைவிடுத்திருந்தபோதிலும் கூட்டத்தை ஆரம்பிப்பது குறித்து இதுவரை எதுவும் அறிவிக்கப்படவில்லை. ஆனல் அநேகமாக இன்றிரவு பந்தோபஸ்துசபை கூட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுறது.

'இந்தியாவின் சுதந்திரத்துக்குட்பட்ட விஷயங்களை விவாதிக்க பாகிஸ்தான்முனைகிறது. இதனை இந்தியா ஒருபொழுதும் அனுமதிக்கமுடியாது. காஷ்மீரின் உள்நிலைமைகுறித்து பாகிஸ்தான் விவாதிக்குமானல் அல்லது இதுசம்பந்தமாக விவாதம் அல்லது ஆலோசனைகள் நடைபெறுமானல் இந்தியா இதில் கலந்துகொள்ளமாட்டாது, இப்படியான செயல்களில் ஈடுபடுவதன்மூலம் தனது பிரசாரத்தை அதிகரிக்க பாகிஸ்தான் விரும்புகிறது. இதற்கு ஐ. நா. இடம் கொடுக்கக்கூடாது' என்றும் அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்

## புதிய செயலகத்தில் ஊழியர் கஷ்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் அண்மையில் புதிதாகக் கட்டப்பட்ட அரசாங்க செயலகத்திற்கு இன்னமும் சில காரியாலயங்கள் வந்துசேரவில்லை. புதிதாகக் கட்டப்பட்ட இச்செயலகத்திற்கு மின் விசிறிகள் மிகக் குறைவாகவே பொருத்தப்பட்டுள்ளன. அங்கேயுள்ள சில காரியாலயங்களில் கறள் பிடித்த பழைய மின் விசிறிகள் பொருத்தப்பட்டிருப்பது கட்டடத்திற்குச் சிறப்பாக அமையவில்லை, அங்கு வேலை செய்யும் ஊழியர்கள் உணவருந்தும் சிற்றுண்டிச் சாலையும் இப்புதிய கட்டடத்தில் இல்லாமல் பழைய கட்டடமொன்றிலேயே இயங்கிவருகின்றது. புதிதாகக் கட்டப்பட்ட செயலகத்தில் ஒரு சிற்றுண்டிச்சாலை அமையாதது ஊழியருக்கு மிகவும் அதிருப்தியையுண்டுபண்ணியுள்ளது.

தற்பொழுது சிற்றுண்டிச் சாலையாக இயங்கிவரும் இடத்தில் ஐந்து, ஆறு மாபிள் மேசைகளும் நாலு வாங்குகளும்தான் இருக்கின்றன. எல்லாமாக யாழ். செயலகத்தில் கிட்டத்தட்ட 350 ஊழியர்கள் வேலை செய்கின்றார்கள். யாழ். அரசாங்க அதிபர் செயலகத்தில் ஒரு நல உரிமைச் சங்கமோ அல்லது விளையாட்டுக் கழகமோ இல்லையெனத் தெரியவருகிறது. சாப்பாட்டு நேரத்தில் சிற்றுண்டிச்சாலைக்கு உணவருந்தச் செல்லும் ஊழியர்கள் கஷ்டப்படவேண்டிய நிலை அடிக்கடி ஏற்படுகின்றதாம்.

வெளி இடங்களில் வேலை செய்யும்பொழுது அவ்விடங்களில் சங்கங்கள் உருவாக்குவதில் முயற்சி செய்யும் ஊழியர்கள், தமது சொந்த இடத்திற்கு வந்ததும் அக்கறை எடுக்காததே ஊழியர் நலவுரிமைச் சங்கம் யாழ். செயலகத்தில் இல்லாமைக்குக் காரணமென்று பல அரசாங்க ஊழியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சாரதி லைசென்ஸ்

## முதலில் தகுதியற்றவர் பின்னர் தகுதிபெற்ருர்!

யாழ்ப்பாணம், செவ்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திரு. எஸ். அப்புத்துரை என்பவர் எடை குறைந்த காருக்குள்ள லைசென்சுடன் எடை கூடிய காருக்கு லைசென்ஸ் பெறுவதற்காக யாழ்ப்பாணபெரும்பாக உதவி மோட்டார் போக்குவரத்து அதிகாரிக்கு மனுச் செய்திருந்தார். சென்ற வாரம் அவரை சோதனைசெய்த பரிசோதகர் அவருக்கு அனுபவம் போதாதென்று சாரதி லைசென்சை வழங்க மறுத்துவிட்டார். இந்த முடிவில் அதிருப்தி கொண்ட விண்ணப்பக்காரர் உதவி மோட்டார் போக்குவரத்து அதிகாரிக்குப் பரிசோதகரின் முடிவை ஆட்சேபித்து மனுச் செய்திருந்தார்.

இந்த மனுவின் பேரில் சாரதி லைசென்ஸ் பெறுவதற்கான பரீட்சை வேறு ஒரு அதிகாரியால் மீண்டும் நடாத்தப்பட்டது. அப்பரீட்சையில் முதல் பரிசோதகரினல் தகமை போதாதென்று காணப்பட்ட விண்ணப்பதாரர் தகுதியுள்ளவராகக் காணப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சாரதி லைசென்ஸ் பெறுவதற்கு சென்று பரீட்சையில் சித்தியெய்யாத விண்ணப்பதாரர் வழமையாக அதனை ஆட்சேபித்து மனுச் செய்வதில்லை எனத் தெரியவருகிறது. சாரதிலைசென்ஸ் பரீட்சைக்குச் சென்றுசித்தியடையாதவர்கள் அந்தத் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் உயர் அதிகாரிக்கு மனுச் செய்யலாம் என்று ஒரு விதி இருக்கின்றது.

## குடியிருப்புப் பிரச்னை

### மந்திரி நடவடிக்கை

பம்பலப்பிட்டி, திங்கள்

தமது தொகுதிகளிலுள்ள குடியிருப்புப் பிரச்னைகளைத் தெரிவிக்குமாறு தொழில்மந்திரி திரு. முகமத் எம். பி.க்களைக் கேட்டுள்ளார்.

நாட்டிலுள்ள குடியிருப்புப் பிரச்னையைத் தீர்ப்பதற்குத்தான் மேற்கொண்டுள்ள முயற்சியில் எம். பி.க்களின் இத்தகைய உதவி தேவையென மந்திரி அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தத் தொகுதிகளிலுள்ள வீடு கட்டக்கூடிய நிலங்கள்பற்றிய விபரத்தை தெரிவிக்குமாறும் மந்திரி கோரியுள்ளார்.

சென்ற வருடம் வீட்டுத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் ஒரு [illegible] ரூபா செலவு செய்யப்படா

மல் இருப்பது மட்டுமல்லாமல் கொழும்பு நகரில் 20,000 குடிசைகள் உள்ளன [illegible] தக்கதாகும்.

## சூருவளி அபாயம்!

பம்பலப்பிட்டி, திங்கள்

அராபிக்கடலின் தென் மேற்கிலிருந்து இலங்கையை நோக்கி 50 மைல் வேகத்தில் சூருவளி வீசுமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் வட, தெற்கு மேற்கு கரையோரப் பகுதிகளில் இன்று இச்சூருவளி பரவுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பம்பாய் துறைமுகத்திலிருந்து கடற்படைக்குக் கிடைத்த செய்தியைத் தொடர்ந்தே மேற்படி தகவல் வெளியாகியுள்ளது. இலங்கையில் சென்ற சில நாட்களாகப் பெய்தவிடாத மழையும், வீசிய காற்றும் இப்படியான சூருவழியொன்று வருவதற்கான அறிகுறிகளை ஊர்ஜிதப்படுத்துகிறது.

## சீன நிறுவனங்கள் கொளுத்தப்பட்டன

### மத்திய ஜாவாவில் எதிர்ப்பு வலுக்கிறது

ஜாகர்த்தா, அக். 25

மத்திய ஜாவாவில் சீன நிறுவனங்கள் பல நேற்றுத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இப்பகுதிகளில் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரம் அடைந்திருப்பதாக இங்கிருந்து வெளியாகும் ஏஜன்ஸி செய்திகள் கூறுகின்றன.

மத்திய ஜாவாவில் நேற்று சீனக் கம்யூனுஸ்டுகளுக்குச் சொந்தமான சிகரெட் தொழிற்சாலை, சீன பாடசாலை, சீன சிற்றுண்டிச் சாலை ஆகியவை கொளுத்தப்பட்டன.

இதற்கிடையில் இந்தோனேஷிய டெலிபோன், தந்தி தொடர்புகளை இராணுவம் பொறுப்பேற்கவிருக்கிறதென அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய பொதுக் கல்வி சபை, ஆலோசனைக்குழு நிறுவப்படும்?

வத்தளை, திங்கள்

தேசிய பொதுக் கல்விச் சபை ஒன்றும், பன்னிரண்டு ஆலோசனைக் குழுக்களும் நிறுவுவது சமீபத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பிரதான அம்சமாகும் என நம்பப்படுகிறது.

மேற்படி கவுன்சில், கல்வி மந்திரிக்கு பொதுக்கல்வி சம்பந்தப்மட்ட வகையில் ஆலோசனைகள் அளிக்கும் என்றும் கல்வி சம்பந்தப்பட்ட வெவ்வேறு துறைகளில் ஆலோசனைக் குழுக்கள் செயற்படும் எனவும் நம்படுகிறது.

கல்வி அமைச்சு முன்னதாகவே உதவிக் கல்வி டைரக்டர் டி. எம். கெட்டியாராச்சி தலைமையில் நால்வர் கொண்ட ஒரு குழுவை நியமித்து, அதை நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று அங்குள்ள கல்லூரியாவற்றிலும் தேசியக் கல்வித் திட்டத்தை அமுல் செய்வது பற்றி அபிப்பிராயங்கள் சேகரிக்கும்படி கட்டளை பிறப்பித்திருக்கிறது.

பாராளுமன்றத்தில் தேசியக்கல்வித்திட்டம் அங்கீகாரம் பெற்றவுடன் மாணவர்கள் மேற்படி திட்டத்தின்படி நாலு பிரிவுகளாகப் பிரிக்கப்படுவர். அவையாவன: விவசாயமும், மீன்பிடித்தொழிலும்வர்த்தகம், பொருளாதாரம், தொழில் நுட்பம் ஆகும்.

## இன்று

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் ஸ்கந்தசஷ்டிவிழா விரிவுரை:-இன்றுஇரவு8-30 மணிமுதல் ஸ்ரீ மணிபாகவதர் ஸ்கந்தசஷ்டி விழாவிரிவுரைத் தொடரில் நல்லூர்க்கந்தன் சன்னதியில் ''ஈசலுடன் ஞானமொழி பேசும் முகம்'' என்னும் சரிதை பக்தவாத்தியசகிதம் கதாப்பிரசங்கம் நிகழ்த்தப்படும்.

ஃ ஃ ஃ

**கந்தகோட்டத்தில்**

நல்லூர்க் கந்தகோட்டத்தில் காலை 8 மணிக்கு ஸ்ரீ ஷண்முகருக்கு விசேஷ அபிஷேகமும் 10 மணிக்கு ஸ்ரீ சுப்பிரமணிய சகஸ்ர நாமத்துடன் விசேஷ பூஜையும் மாலை 5 மணிக்கு ஸ்ரீ ஷண்முககவச பாராயணத்துடன் விசேட பூசையும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

''பொறுமையே ஊறுபடுத்த இயலாத கவசமாகும். பிறர் நம்மை எதிர்த்துப் போர் புரியும் போது நம்மைப் பாதுகாத்துக்கொள்ளுதற்குப் பொறுமையினும் சிறந்த கவசம் வேறில்லை. உடலைப் புண்படுத்த முடியாதபடி காப்பது கவசம். மனதினைப் புண்படுத்த இயலாதபடி காப்பது பொறுமையே.'

— புத்த பகவான்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 3..

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி மீ 10 உ (26-10 65


## பதுக்கலும் கொள்ளை லாபமும்

அத்தியாவசிய உணவுப் பொருள்களில் கொள்ளை லாபம் அடிப்பதையும் பொருள்களைப் பதுக்குவதையும் தடுப்பதற்கு ஆயிரம் அரசாங்க ஊழியர்கள் உணவுக் கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கப்படவிருக்கிறார்கள் என்று ஒரு செய்தி கூறுகிறது. பதுக்கலையும் கொள்ளை லாபத்தையும் தடுத்து அத்தியாவசியப் பொருள்க தட்டுப்பாடில்லாமலும் நியாயமான விலையிலும்பொது மக்களுக்குக் கிடைக்க வேண்டும். இதற்கு அரசாங்கம் எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் பொது மக்களின் ஆதரவு நிச்சயம் இருக்கும்.

தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் வாழ்க்கைச் செலவு உயர்வைத் தடுக்கப் போவதாக அறிவித்தது. வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடில்லாமல் நியாயமான விலையில் கிடைக்கவும் நிபுணர் குழுக்களையும் மந்திரி சபை உபகுழுக்களையும் அரசாங்கம் நியமித்து ஆராய்ந்தது. எனினும் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஏழு மாதங்களுக்கு மேலாகியும் வாழ்க்கைச் செலவு குறையவில்லை. தனியார் துறை வர்த்தகர்கள் பதுக்கல், கொள்ளை லாபம் ஆகியவைகளில் ஈடுபடுவதே அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படவும் விலைஉயர்வு ஏற்படவும் காரணம் என்று அரசாங்கமே கூறுகிறது. சிறு வியாபாரிகளைவிடப் பெரிய வர்த்தகர்களே இதற்குப் பொறுப்பாளிகளாவர். முன்னைய அரசாங்கம் தனிப்பட்ட வர்த்தகர்களிடமிருந்த இறக்குமதி ஏகபோக உரிமைகளை நீக்கி கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடம் அந்த உரிமையை ஒப்படைத்தது. அதன் நோக்கம் நல்லதாக இருந்ததெனினும் சிலரின் தவறான நடத்தை காரணமாகக் கூட்டுறவு மொத்த விற்னவுஸ்தாபனமும் பொது மக்களுக்கு நன்மையாக இருக்கவில்லை. இறக்குமதி உரிமைகள் அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள கூ. மொ. வி. ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டதால் தனிப்பட்ட வர்த்தகர்களும் பொருள்களைப் பதுக்கிக் கொள்ளை லாபம் அடிப்பதில் ஈடுபட்டனர். அப்போதைய அரசாங்கத்தின் பெயருக்கு இழுக்குத் தேடவும் அவர்கள் அவ்வித முயற்சியிலீடுபட்டதாகக் கருதப்பட்டது.

தேசிய அரசாங்கம் ஆட்சிக்குவந்தபின் தனியார் துறையினருக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அந்நிய செலாவணியும் அனுமதிக்கப்பட்டது. [எ]னினும் பதுக்கலும் கொள்ளை லாபமும் இன்னும் நீங்கவில்லை. பொது மக்களே பாதிக்கப்படுகின்றனர். கொள்ளை லாபம் அடிப்பவர்கள் மீதும் பதுக்கல் செய்பவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்கப்படுகிறதெனினும் இவை போதாவென்றே தோன்றுகிறது! இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபட்டு குற்றவாளிகளாகக் காணப்பட்டோர்மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். எளிய ஊழியர்கள் அகப்பட்டுக் கொள்ளவும் பெரும் முதலைகள் தப்பிக்கொள்ளவும் அபராதத்தைச் செலுத்திவிட்டு அந்தத் தொகையையும் ஒரே நேரத்தில் மீண்டும் அடையவும் இப்பொழுது வழியிருக்கிறது.

உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் இப்பொழுதும் பலர் இருக்கின்றனர். இவர்களில் ஒரு சிலரின் தவறான நடத்தையால் எல்லோர் மீதும் பொது மக்களுக்கு நல்ல அபிப்பிராயமில்லை. புதிதாகத் தெரிவு செய்யப்படும் உணவுக் கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர்களாவது தமது கடமையைத் துணிச்சலுடனும் நேர்மையாகவும் செய்து பொது மக்களின் நம்பிக்கையைப் பெறுவதுடன் கொள்ளை லாபம், பதுக்கல் ஆகிய சமூக விரோதச் செயல்களையும் ஒழித்துக்கட்டவேண்டும்.

## கம்யூனிஸ்டுகள் கைது

லிப்ஸன், அக். 25

சட்டவிரோதமாக இயங்கும் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்கள் நால்வரைப் பொலிஸார் கைதுசெய்ததாகப் போர்த்துக்கீய அரசாங்கம் தெரிவித்துள்ளது. தேசியத் தகவல்பகுதியினர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் மக்கள் மத்தியில் கம்யூனிஸத்தைப் பரப்புவதற்குக் கட்சியினர் தயாரித்துவைத்திருந்த ஆயிரக்கணக்கான துண்டுப்பிரசுரங்களும் கைப்பற்றப்பட்டதாகவும், கைதுசெய்யப்பட்ட நால்வரில் ஒருவர் மாஸ்கோவில் கட்சி அங்கத்தவர்களை எவ்விதம் நடத்த வேண்டுமென்பது பற்றிய பயிற்சி பெற்றவரெனவும் தெரிவித்தனர். (பி.டி.ஸி.)

## சுகமடைகிறார்

சென்னை, அக். 25

கடந்த 12-ம் திகதி மாஸ்கோவிலுள்ள ஆஸ்பத்திரியொன்றில் சத்திர சிகிச்சை பெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசி திரு. பி. சுந்தரய்யா, தற்பொழுது சுகமடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(பி. டி. ஐ.)

## பொதுத்தேர்தல்

டெல்அவிவ், அக். 25

இஸ்ரேல் பொதுத்தேர்தல் அடுத்தமாதம் இரண்டாம் திகதி நடைபெறும்.

(பி.டி.ஸி.)

# பொருளாதார வசதிக்குறைவே சச்சரவுகளுக்கு காரணம்

## சர்வசமய மகாசபைக் கூட்டத்தில் பேச்சு

வெள்ளவத்தை, திங்.

'விஜயனின் வருகையுடன் ஆரம்பிக்கும் சிங்கள காலத்திற்கு முன்னமே இந்தநாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கியது. இலங்கை வரலாற்றில் சிங்கள மக்களுக்கும், தமிழர்க்கும் ஏற்பட்டபோராட்டங்களுக்குக்காரணம் சிங்கள மன்னர்கள் ஒருபக்கசார்பற்ற கொள்கையை நிலைநாட்டத்தவறியதேயாகும். இலங்கையையே தாயகமாகக்கொண்ட தமிழர்க்கும் சிங்களவர்க்கும் பகை இருக்கவில்லை'' என்று சர்வ சமய மகாசபையினர் தீபாவளியைக்குறித்து ஒழுங்குசெய்த கூட்டத்தில் இலங்கை பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. ஆ. வி. மயில்வாகனம் 'இலங்கையில் இந்து சமயத்தின் கலாச்சாரசெல்வாக்கு' என்பது பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு வண. பஞ்ஞதிஸ்ஸ தேரோ தலைமைவகித்துப் பேசுகையில், ''கடந்த ஒரு நூற்றாண்டிற்கு முற்பட்டதானஇரண்டாயிரம் ஆண்டுகளாக சிங்களவர், தமிழர் என்ற பிரிவின்றி ஒரே சமுகமாகவே இலங்கை மக்கள் இருந்தனர். இந்தநாட்டில் சகல மக்களுக்கும் வேலை வசதி இருக்குமானால் அரசியல் அடிப்படையிலோ மத அடிப்படையிலோ சண்டைகளும் சச்சரவுகளும் ஏற்படமாட்டாது. இதற்குக் காரணம் பொருளாதார வசதிக்குறைவே'' என்று குறிப்பிட்டார்.

பேராசிரியர் மயில்வாகனம் தொடர்ந்து பேசுகையில், ''போர்த்துக்கேயரின் வருகைவரையில் சைவர் என்பது தமிழரையே குறித்து சைவம் என்பது தமிழரின் மதமாகவே காணப்பட்டது. போர்த்துக்கேயரின் காலத்திற்குப் பின்பாக ஆறுமுகநாவலரின் காலத்திலே தான் இந்துக்கள் தமது பாரம்பரியத்தை உணர்ந்து தமிழையும் சைவத்தையும் போற்றத்தலைப்பட்டனர். இதனால் நாவலர் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது'' என்று குறிப்பிட்டார்.

மதிப்புரை

## கந்தபுராணம்

(சூரபன்மன்வதைப் படலம்)
பொழிப்புரை

உரை ஆசிரியர்கள்- சி. மருதபிள்ளை,
தா சிவகுருநாதன், விலை ரூ-5-00.
கிடைக்குமிடம்- ஸ்ரீ சண்முகநாத புத்தகசாலை, காங்கேசன்துறைவீதி, யாப்பாணம்.

கந்தசஷ்டி ஆரம்பமாகிவிட்டது. சைவசமய சிவபுண்ணிய காலங்களில் ஐப்பசி மாதத்தில் வருகின்ற கந்த சஷ்டித்தினங்களும் மார்கழிமாதத்தில் வருகின்ற திருவெம்பாவைத் தினங்களும் மிகமிகச் சிறந்த சிவபுண்ணிய காலங்களாகும். கந்த சஷ்டித்தினங்களிலே கந்தசுவாமியாருக்கு விசேஷ அபிஷேகம், பூசை செய்து திருவிழா எடுப்பதுடன் அவருடைய பெரும் புகழ் பேசப்படுகிறது. கந்தனுடைய பெரும் புகழைப் பேசும் நூல் கந்தபுராணமாகும் கந்த புராணத்தில் மிகமுக்கியமான பகுதி சூரியன் மன்வதைப் படலமாகும். கந்த சஷ்டிதினங்களில் சூரபன்வதைப் படலம் வாசிககப் பெற்றுப்பொருள் கூறும் வழக்கம் பண்டு தொட்டிருந்து வந்தது. இப்போது இப்பழக்கம் குறைந்து வருகிறது. கந்தபுராணம் சூரபன்மன் வதைப் படலத்தின் அருமை பெருமைகளை எல்லோரும் படித்துப் பயன் பெறும் பொருட்டு இந்நூல் தக்கதருணத்தில் வெளிவந்துள்ளதென்று கூறலாம்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள முதலியார் செ. சின்னத்தம்பி, இப்போது பல வகையிலும் வீழ்ந்து கிடக்கும் தமிழினம் மீண்டும் உயர்ந்து உய்ய வேண்டுமெனில் கந்தபுராணத்தையாண்டும் படிக்க வைத்தல் வேண்டும் என்று ஞானச் செல்வராகிய யோக சுவாமிகள் சைவ மக்களுக்கு விடுத்த அன்புக் கட்டளையைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

திரு. தா. சிவகுருநாதன், திரு. சி. மருதபிள்ளை ஆகிய இருவரும் சிறந்த பொழிப்புரையும் அரும்பதவிளக்கத்தையும் அளித்து சைவ உலகுக்குத் தொண்டு புரிந்துள்ளனர். கந்தசஷ்டி காலத்தில் சைவமக்கள் எல்லோரும் இதனைப் படிப்பதால் இன்பம் பெறலாம்.

— தேனீ

## பயிற்சி முடிவடைகிறது

யாழ்ப்பாணம், செவ்.

அரசாங்க நிர்வாகசேவையில் தெரிவுசெய்யப்பட்ட திருவாளர்கள் எஸ். சிவதாசன், அன்டன் அல்பிறட், செல்வி, கே. இராஜலக்ஷ்மி அம்மாள் ஆகியோர் தற்பொழுது யாழ். கச்சேரியில் ஒருவருடப் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்றனர். இவர்களுடையபயிற்சி நவம்பர் 5ந் தேதியுடன் முடிவடைகிறது. பயிற்சி முடிவடைந்ததும் இவர்கள் உள்நாட்டு அமைச்சர் காரியாலயத்துக்குச் சென்று அங்கிருந்து வேறிடங்களுக்கு வேலைசெய்வதற்காக அனுப்பப் படுவார்களெனத் தெரியவருகிறது.

திரு. எஸ். விநாயகலிங்கம் யாழ். ஸ்தலஸ்தாபன உதவி அதிகாரி காரியாலயத்தில் பயிற்சிபெற்றுக்கொண்டிருக்கிறார். பயிற்சி முடிந்ததும் இவரும் ஸ்தலஸ்தாபன அமைச்சின் காரியாலயத்திற்குச் செல்வாரெனத் தெரியவருகிறது.

## கொழும்புத் திட்டத்தில் பயின்ற இலங்கையர்

பம்பலப்பிட்டி, திங்கள்

கொழும்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை2115 இலங்கையர் அதன்கீழ் உபகாரச்சம்பளம் பெற்று வெளிநாடுகளுக்குச் சென்று பல்வேறு பயிற்சிகள் பெற்றிருக்கின்றனர்.

கொழும்புத் திட்டக் கவுன்ஸிலின் 1964-65-ம் ஆண்டுக்கான அறிக்கையில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையர்களுக்கு பயிற்சியளித்த நாடுகளில் பிரிட்டன் முதன்மை வகிக்கின்றது.

இலங்கையில் இதுவரை ஆசிய நாடுகளின் மாணவர்கள் 77 பேர் உபகாரச்சம்பளத்திட்டத்தின்கீழ்பயிற்சி பெற்றார்கள் 1964-65-ம் நிதியாண்டில் மட்டும் 149 இலங்கையர் கொழும்புத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றுள்ளனர்.

## நாட்டிலும் நகரிலும்

முருகக் கடவுளுக்கு மிகவும் பிரீதியான விரதம் கந்த சஷ்டி விரதம் என்று புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. முருகன் தமிழுக்கும் தமிழருக்கும் தமிழ் உலகுக்கும் உரிமைத் தெய்வம் என்று தமிழர் எல்லோரும் கூறிக் கொள்ளுகிறோம். ஆனால் இந்த கந்த சஷ்டி விரதத்தை எத்தனை தமிழர்கள் இதய பூர்வமாக பயபக்தியுடன் அனுஷ்டிக்கிறார்கள் என்று யாராவது கேட்டால் சொல்ல வெட்கமாயிருக்கிறது.

யாமறியத் தக்கதாக முன்னைய நாட்களில் முருகாலயங்களில் மட்டுமல்ல வேறு ஆலயங்களிலும் இந்த ஆறு நாட்களுக்கும் கந்த புராணப் படிப்பு நடக்கும். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் அதிகாலையிலேயே நீராடிகோயிலுக்குச் சென்று வழிபட்டு புராணப் படிப்பைக் கேட்பார்கள். இளநீர் குலைகளையும் பசுவின் பாலையும் சுமந்து கொண்டு வந்து முருகனுக்கு அபிஷேகம் செய்வார்கள். ஆறு நாட்களிலும் கடுமையான உபவாசமிருந்து இரவில் மட்டும் ஒரு மிடறு பாலையோ அல்லது ஓர் இளநீரையோ பருகிவிட்டு இருந்து விடுவார்கள். முடியாவிட்டால் சிலர் ஒருவேளை உணவு மட்டும் உட்கொள்வார்கள். கோயிலுக்குப் போக முடியாதவர்கள் வீட்டில் இருந்து கொண்டே ஒந்த சஷ்டி கவசத்தைப் படித்துக் கொண்டு முருகோபாசனையில் ஈடுபடுவார்கள். இன்று அப்படி நடக்கிறதா?

தீபாவளி, சிவராத்திரி என்று மதத்தோடு சம்பந்தமான பெருநாட்களுக்கு விடுதலை வேண்டுமென்று கூச்சல் போட நாம் எல்லோ தயாராயிருக்கிறோம். ஆனால் இப் பெருநாட்களோடு சம்பந்தப்பட்ட மதக்கிரியைகளை முறைப்படி அனுஷ்டிக்கிறோமா? தீபாவளியன்று நீராடி புத்தாடை உடுத்து கோயில் வணக்கம் செய்கிறவர்கள் நூற்றுக்கு ஐந்து பேர் என்றால், மீதியுள்ள தொண்ணூற்றைந்து பேரும் குடித்து வெறித்துக் கும்மாளம் போடுகிறவர்களாயிருக்கிறார்கள். உலகத்திலேயே மிகவும் முன்னேற்றமான நாகரிக நாடு என்று கருதப்படும் அமெரிக்காவில் அவர்களுடைய சுதந்திர தினத்தன்று குடிவெறியாலும் அடிதடியாலும் மோட்டார் விபத்துக்களாலும் நூற்றுக்கணக்கான மனிதர் கொல்லப்படுகிறார்கள். மனிதரைக் கொல்வது தான் சுதந்திர தினக் கொண்டாட்டம் என்றால் அந்த சுதந்திரத்தின் பலன் இதுதானே? நல்ல வேளையாக நம் நாட்டில் அப்படி ஒன்றும் இன்னும் நிகழவில்லை. என்றாலும் காலம் போகப்போக நமது தீபாவளித் திருநாள் அமெரிக்க சுதந்திர தினத்தைப் பின் பற்றி விடுமோ என்று அச்சமாயிருக்கிறது.

பௌத்தர்களின் வெசாக் பெருநாளுக்கு இலங்கையிலுள்ள சாராயத் தவறணைகளும் மதுபானக்கடைகளும் இரண்டு நாட்களுக்கு மூடப்படுகின்றன. தீபாவளிக்கும் இதுபோல ஓர் உத்தரவு பிறப்பிக்கவேண்டியது அவசியம்.

ஃ ஃ ஃ

திருக்கோணமலைக்குச் சமீபத்திலுள்ள தம்பலகாமம் என்ற ஊரின் பெயரை 'தம்பலகமுவ' என்று சிங்களத்தில் மாற்றவேண்டுமென்று ரயில்வே பகுதி உத்தரவிட்

(6-பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ராஜஸ்தான் பகுதியில் பெரும் அபாயம்!

## ஐக்கிய நாடுகள் சபைக்கு யுதாண்ட் அறிக்கை

### துருப்புக்கள் பெருமளவில் இருப்பதாக அறிவிப்பு

நியுயோர்க், அக். 25

ராஜஸ்தான் பகுதிதான் இப்பொழுது அபாயகரமானதாக இருக்கிறதென்றும் இங்கு போர் நிறுத்தக் கோட்டுக்கு இரு பக்கங்களிலும் இராணுவத் துருப்புகள் நிறைந்து போயிருக்கிறார்கள் என்றும் ஐக்கிய நாடுகள் பொதுக் காரியதரிசி யுதாண்ட் ஐ. நா. பந்தோபஸ்து சபைக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியிலுள்ள ஐ. நா. தலைமைப் பார்வையாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களை ஆதாரமாகக் கொண்டு யுதாண்ட் தயாரித்துள்ள அறிக்கையில், ராஜஸ்தான் பகுதி அபாயகரமானதாக இருப்பதுடன் இப்பகுதியில் எந்த நேரமும் பெரிய கைகலப்புகள் மூளக்கூடிய அறிகுறிகள் காணப்படுகிறதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

போர்நிறுத்தம் ஏற்பட்டதற்குப் பின்னர் ராஜஸ்தான் பகுதியில்தான் இராணுவத் துருப்புகள் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர் என்றும் யுதாண்ட் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**ஐ. நா. கூடுகிறது**

இன்று பகல்வரை வெளியான செய்திகளின்படி ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபைக் கூட்டத்தை யுதாண்ட் கூட்டவில்லை என்றே அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்று பிற்பகல் ஐ. நா. பந்தோபஸ்துசபை கூடலாம் என்று இங்கு கருதப்படுகிறது. புதிய கூட்டத்தை கூட்டுமாறு பாகிஸ்தான் கோரியிருக்கிறது.

## சர்ச்சில் மலை

வாஷிங்டன், அக். 25

வடஅமெரிக்காவிலுள்ள உயரமான ஒரு மலைக்கு சர்ச்சிலின் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. காலம்சென்ற பிரிட்டிஷ் தலைவர் சர். வின்ஸ்டன் சர்ச்சிலைக் கௌரவிக்குமுகமாக அமெரிக்க அதிபர் திரு லிண்டன் ஜோன்ஸன் இதனை அங்கீகரித்துள்ளார்.

இம்மலையின் உயரம்: 20,320,29.

(பி. டி. ஸி.)

## குரோமிக்கோ

நியுயோர்க், அக். 25

கியூபாவுக்கு மூன்றுநாள் விஜயம் செய்துவிட்டு மாஸ்கோ திரும்பும் வழியில் சோவியத் வெளிவிவகாரமந்திரி திரு. குரோமிக்கோ இங்கு சில மணி நேரம் தங்கினார்.

பத்திரிகை நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் தமது கியூபா விஜயம் நல்ல பலனை அளித்தது என்றும் கியூபா பிரதமர் காஸ்ட்ரோவுடன் தாம் மனம்விட்டு பேசியதாகவும் கூறினார்.

ஹவானாவுக்குச் செல்லு முன்னர் திரு. குரோமிக்கோ ஐ, நா. பொதுச்சபைக்கு விஜயம் செய்தார்.

(பி. டி. ஸி)

## பல பகுதிகளில் பாக். துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம்

புதுடில்லி, அக். 25

லாகூர், சியால்கோட் அரங்குகளில் பாகிஸ்தான் துருப்புகள் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தங்களது நிலைகளைப் பலப்படுத்தி விஸ்தரிப்பதில் அவர்கள் ஈடுபட்டு வருவதாக செய்திகள் கூறுகின்றன.

கடந்த 48 மணி நேரத்தில் பாகிஸ்தான் துருப்புகள், பர்கி, பாஷின், ஜல்லோ, ரஜோக், பிடியன் ஆகிய பகுதிகளில் 17 தடவைகள் போர்நிறுத்தத்தை மீறியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை, பாகிஸ்தான் விமானமொன்று சாணுவாலா விலிருந்து வடக்கைநோக்கி (உண்மையான கட்டுப்பாட்டுக்கோட்டைக் கடந்து) பறந்தது. பலபகுதிகளில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து வரும் பாகிஸ்தான் துருப்புகளுக்கு எதிராக இந்தியத் துருப்புகளும் துப்பாக்கிப்பிரயோகம் செய்து வருகின்றனர்.

(பி. டி. ஐ)

## 'அங்கீகரிப்பதைவிட வேறு வழியில்லை'

ஜோகனர்பேர்க், அக். 25

ரொடீஷியா ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடனம் செய்யுமானால், தென்னாபிரிக்கா அதை அங்கீகரிப்பதைத் தவிர வேறு எதுவும் செய்வதற்கில்லை என்று தென்னாபிரிக்க எதிர்க்கட்சித் தலைவர் சேர் டி. வில்லியர் கிராவ் பத்திரிகை ஒன்றுக்கு போட்டியளிக்கும் போது தெரிவித்தார்.

''ரொடீஷியா எங்கள் அயல்நாடு. எங்களுக்கும் அவர்களுக்கும் இரத்தத்தால் உறவுண்டு, நாங்கள் இருவரும் பல விஷயங்களை ஒருமித்தே செய்து வருகிறோம். தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் ஒருதலைப்பட்ச சுதந்திரத்தை அங்கீகரிப்பதைவிட வேறு வழி எதையும் சிந்திக்கவும் முடியாதிருக்கிறது'' என சேர் கிராவ் மேலும் தெரிவித்தார்.

(பி. டி. ஸி.)

## மூவர் கொல்லப்பட்டனர்

சாந்தோடொமிங்கோ அக். 25

ஹோடியின் அரசாங்கம் விடுத்த உத்தரவைத் தொடர்ந்துவீடுகள்தோறும் நடைபெற்ற ஆயுதப் பரிசோதனையின் விளைவாக குடியானவர்களுக்கும், அதிகாரிகளுக்குமிடையில் ஏற்பட்ட சண்டையொன்றில் மூன்று பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அரசாங்கத்தை வீழ்த்த புதிய சதிமுயற்சி ஒன்று நடைபெறுவதாக அறிந்தே வீடுகள்தோறும் ஆயுத தேடுதல் நடத்தப்பட்டதெனவும் அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ராஜ்யத்தின் நிலைமையை அறிந்து அங்கு அமைதியை நிலைநாட்ட அமெரிக்க ராஜ்யங்களின் அமைதி இயக்கத்தைச் சேர்ந்த இரு உயர்தர அதிகாரிகள் இங்கு வந்துள்ளனர்.

## நிக்ருமா யோசனை

அக்ரா, அக். 25

இங்கு நடைபெற்று வரும் ஆபிரிக்க நாடுகள் உச்சி மகாநாட்டில் கானா அதிபர் உரை நிகழ்த்துகையில், சகல ஆபிரிக்க நாடுகளுக்கும் ஒரு மத்திய அரசாங்கம் இருக்கவேண்டும் என்று யோசனை கூறியுள்ளார்.

இந்த யோசனையை ஆபிரிக்கநாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

## பாகிஸ்தானுக்கு ரஷ்ய உதவி

ராவல்பிண்டி, அக். 25

பாகிஸ்தானின் 3-வது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு சோவியத் யூனியன் மூன்று கோடி டாலர் உதவியளிக்கும். இதுசம்பந்தமான ஒப்பந்தமொன்று இன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

# சுதந்திரப் பிரகடனம் செய்தால் இரத்தக் களரி ஏற்படும்

## ஆபிரிக்கத்தலைவர்கள் எச்சரிக்கை

### ஸாலிஸ்பரியில் வில்ஸன்; ஏராளமான ஆபிரிக்கர்கள் கைது

ஸாலிஸ்பரி, அக். 25

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன் இங்கு விஜயம் செய்வதைத் தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

திரு. வில்ஸனுடன் காமன்வெல்த் காரியதரிசி ஆர்தர் பொட்டம்லியும் இங்கு விஜயம் செய்கிறார். இவர்கள் இன்று பிற்பகல் ஸாலிஸ்பரி வந்து சேருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், ரொடீஷியாவில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஏராளமான ஆபிரிக்கத் தலைவர்கள் முன் நடவடிக்கையாகக் கைது செய்யப்பட்டு பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ரொடீஷிய தேசிய தலைவர் நேற்று விடுத்த ஒரு அறிக்கையில் பிரதமர் ஸ்மித்தின் திட்டப்படி சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டால், நிச்சயம் இங்கு இரத்தக்களரி ஏற்படும் என்று எச்சரிக்கை செய்துள்ளார்.

ரொடீஷியப் பிரதமரின் திட்டத்தை எதிர்த்து அறிக்கைகள் வெளியிட்ட பல ஆபிரிக்கத் தலைவர்கள் தற்பொழுது கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வின்ஸன் இங்கு தங்கியிருக்கும் பொழுது அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு பந்தோபஸ்து ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

## மவுண்ட்பேட்டன்

புதுடில்லி, அக். 25

ஏர்ல் மவுண்ட்பேட்டன் தனது உலக சுற்றுப்பிரயாணத்தின்போது இந்தியாவுக்கும் விஜயம் செய்வார். அப்பொழுது தான் தயாரிக்க இருக்கும் டெலிவிஷன் படத்திற்குத் தனது சொந்த அனுபவங்களைப் பற்றிய குறிப்புகளைச் சேகரித்துக் கொள்வார்.

ஏர்ல் மவுண்ட்பேட்டன் இங்கே வரும்பொழுது சரித்திரப்பிரசித்திவாய்ந்த இடங்களுக்குச் செல்வார். இரண்டு மூன்று மாதங்களுக்குள் தனது உலக சுற்றுப் பயணத்தை மேற்கொள்வார்.

(பி. டி. ஐ.)

# துருப்புகள் விலக்கல்

## ஆரம்ப பேச்சுக்கள் நடத்த பாகிஸ்தான் இணக்கம்


ராவல்பிண்டி, அக். 25

ஐ. நா. யோசனைப்படி சண்டை நடைபெற்ற பகுதிகளிலிருந்து இந்திய, பாகிஸ்தான் துருப்புகளை வாபஸ் பெறுவது குறித்து இந்திய - பாகிஸ்தான் நாடுகளில் பேச்சுகள் நடத்துவதற்கு பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் இணக்கம் தெரிவித்துள்ளார்.

துருப்புகளை விலக்குவது குறித்து புதுடில்லியிலும் ராவல்பிண்டியிலும் பேச்சு நடத்துவதற்கு பிரேஸில் நாட்டைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ஒருவரை ஐ. நா. பந்தோபஸ்து சபை தேர்ந்தெடுத்திருந்தது.

எந்தெந்தப் பகுதிகளிலிருந்து என்னென்ன மாதிரி எவ்வளவு தொகையினரை வாபஸ் பெறுவது என்பது குறித்து இவர் இரு நாட்டு அரசாங்கங்களுடனும் பேச்சுக்கள் நடத்துவார்.

# விண்வெளி விமானிகள்



சந்திர மண்டலத்தில் இறங்கவிருக்கும் அமெரிக்க விண்வெளி விமானங்களின் ஆறு விமானிகளே இங்கு காட்சி தருகிறார்கள். டெக்ஸஸ் ஹவுஸ்டனில் அண்மையில் நடைபெற்ற பத்திரிகை மகாநாட்டுக்கு இவர்கள் வந்திருந்த போது இப்படம் பிடிக்கப்பட்டது. இவர்களின் பெயர்கள் வருமாறு (இடமிருந்து வலம்): ஜோசப் கேர்வின் (33), எட்வர்ட் கிப்ஸன் (29), பிருங்க் கேட்டிஸ் மைக்கல் (31), டோன் [illegible] ஓவென் கறிஒட் (34) இவர்களுக்கு மூன்று வருட பயி[illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மாய மாளிகை

— ஆறுமுக வேந்தன் —

அவனது வாரிவிடாது சுருள் சுருளாக இருந்த செம்பட்டைமயிரும் நீண்ட மீசையும் முகத்தைப் பயங்கரமாக்கியிருந்தன. மந்திரவாதியைக் கண்ட கண்ணன் பயந்து திரும்பி ஓட எத்தனித்தான். உடனே மந்திரவாதி, 'கண்ணு! ஓடாதே. அங்கு நீ போவதற்குப் படிகள் இல்லை' என்ருன். அவனுடைய சொல்லில் நம்பிக்கையில்லாமல் போய்ப் பார்த்தபொழுது படிகள் எல்லாம் மாயமாக மறைந்துள்ளதையும், மாயமாளிகை, விசித்திரப் பிராணியின் கால்களிலிருந்துதொங்கும் அறுக்க முடியாத கயிறுகளினுல் கட்டப்பட்டு ஊசலாடுவதையும் கவனித்தான் போக வழியில்லாமல் திகைக்கும் கண்ணனை மந்திரவாதி சைகையால் அழைத்தான். கண்ணனும் மந்திரத்தாற் கட்டுண்டவன் போல் மந்திரவாதியிடஞ் சென்று 'நீ என்னை அழைத்தத காரணம் என்ன?' என்றுகேட்டான். அதற்கு மந்திரவாதி, 'நான் உன்னைப் போல் சகல இலட்சணங்களுடன் கொண்ட, சூடிகையான பன்னிரண்டு வயதுப் பொடியன் ஒருவனை எனது தேவதைக்குப் பலியிட்டால் கடவுளுக்கும் சமமான வல்லமையுடையவனுகஆவேன்' என்று கூறினுன். பின்பும் அவன், 'அதற்காக நான் உன்னை ஏமாற்றி எனது மந்திரசக்தியால் இவ்விடம்வர வழைத்தேன்' என்ருன். இவற்றைக் கேட்டவுடன் கண்ணன் 'குலைப்பன் காய்ச்சல்' வந்தவனைப்போல் நடுங்கினுன்.

அவனுடைய நடுக்கத்தை அதிகப் படுத்துவது போல மந்திரவாதியின் குரல் பயங்கரமாக ஒலித்தது. 'இன்னும் ஒரு மணி நேரத்தில் நீ பலியிடப்படுவாய், அதற்கு முன் குள்ளன் உன்னைக் குளிப்பாட்டி மாலை அணிவித்துபலிபீடத்துக்கு அழைத்து வருவான்' என்று கூறிவிட்டு விடுவிடென்று நடந்து சென்று விட்டான்.

சிலவினுடிகள் போயிருக்கும் இரண்டு அடி உயரமும் தலையில் ஒரு குல்லாயும் தரித்த ஒரு விசித்திர மனிதன் மாளிகை வாயிலில் திடீரென்று தோன்றினுன். அவனைக் கண்டதும், மந்திரவாதி குறிப்பிட்ட குள்ளன் இவன்தான் என ஊகித்த கண்ணன், இவனுடன் பேச்சுக்கொடுத்துநேரத்தையாகுதல் போக்குவோமென்றநினைப்புடன் குள்ளனை அணுகி, குள்ளா! என்னைக் கூட்டிக்கொண்டு போகவா வந்தாய்?' என்று கேட்டான். அதற்கு குள்ளன் 'ஆமாம்' என்ருன் புன்னகையுடன். உடனே கண்ணன், 'அப்படியானுல் இந்த மாளிகை முழுவதையும் சுற்றிக் காண்பிக்கிருயா?' என்று கேட்டான். உடனே குள்ளனும் 'உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?' என்ற எண்ணத்துடன் அதற்கென்ன என்று கூறினுன். அவ்வாறேஎல்லாவற்றையும் காண்பித்துவிட்டு முற்றத்திற்கு வந்த குள்ளன் அவ்விடமிருந்த அதிசயங்களை விளக்கிக் கூறினுன். அவ்வாறு வரும் பொழுது, கண்ணன் முதன் முதல் ஏறிய இடத்திற்கருகில் ஒரு சிறிய நாலைந்து படிகளுள்ள அடுக்கு ஒன்று கிடந்தது.

(அடுத்த இதழில் முடியும்)

# தீபாவளி என்ருல் என்ன?

— க. கனகலிங்கம்

[தீபாவளித்திருநாள்வந்து போய்விட்டது. அதனைப் பற்றி இங்கு சிறிது ஆராய்வோம்].

உலகின் கண்தோன்றிய பல் வேறு மதத்தவர்கள் தம்மதங்களின் கோட்பாடுகளுக்கேற்ப வருடம் தோறும் சில தினங்களை விசேட தினங்களாககருத்தில்கொண்டு கொண்டாடி மகிழ்வார்கள். கிறிஸ்தவ மதத்தவர்கள் ஈஸ்ரர், கிறிஸ்மஸ் ஆகிய தினங்களை விசேஷதினங்களாகவும் இஸ்லாம் மதத்தவர்கள் ஹஜ், ரம்ஸான் ஆகிய தினங்களையும், பெளத்தமதத்தவர்கள் வெசாக், போசன் ஆகிய தினங்களையும் விசேட தினங்களாக கருதுவார்கள். அதே போல இந்துமதத்தவர்கள் தைப்பொங்கல், தீபாவளி ஆகிய தினங்களை விசேஷ தினங்களாக கருதுவார்கள்.

ஒவ்வொரு பண்டிகையும் மக்களை நல்வழிப்படுத்தும் பல ருசிகரமான சம்பவங்களை பகரும். தீபாவளி என்பதன் பொருள் தீபங்களால் அலங்கரித்தல் எனப்பொருள்படும். அதாவது நான் என்ற மமதையை ஊட்டி வளர்க்கும் அஞ்ஞானமாகிய இருளை அகற்றி, மெஞ்ஞானமாகிய ஞானஒளியை தோற்றுவித்தல என பொருள்படும் அஞ்ஞானப்பாதையிலே சென்றுகொண்டிருப்பவர்கள் அழிவுறுத.. நிச்சயம். இத்தத்துவத்தின் உண்மையை உணர்த்தும் சம்பவமாக அமைவதுநரகாசுரன் வரலாருகும்.

முன்னொருகாலத்திலே நரகாசுரன் என்னும் ஓர் அசுரன்வாழ்ந்து வந்தான் இறைவன் மேல் கடுந்தவம் இயற்றி இறவாதிருக்க வரம் பெற்ருன். அந்த வரம் பெற்ற அவன் நான் என்ற கர்வம் கொண்டவனுக தான் செய்வதே சரியென்ற மனப்பான்மையோடுதேவர்களையும் மானிடர்களையும் தன்மனம் போல் இம்சித்து வந்தான். செய்வதறியாது கதி கலங்கிய தேவர்களும், மானிடர்களும் விஷ்ணுபகவானிடம் சென்று தம்இன்னலைத்துடைக்குமாறு வேண்டிநின்றனர். வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் எம்பெருமான் மக்கள் படும் இன்னல்கண்டு சகியாதவராய் நரகாசுரனை கொல்லச்சித்தங்கொண்டு அவன் இருப்பிடம் சேர்ந்து அவனைக்கொல்லத் தலைப்பட்டார். விஷ்ணுபகவானைக் கண்ட அவன் அவரின்மேல் பாமாலை தொகுத்து எம்பெருமானே நான் இறக்கு முன் நான் வேண்டும் வரத்தை யருளவேண்டுமென இரந்து நின்ருன். எம்பெருமான் அவன் மேல் இரக்கம் கொண்டவராய் வேண்டும் வரம் யாது கேளீர் என வினவினுர் அவன் வேண்டிய வரம்:-

5-ம் பக்கம் பார்க்க)

# விஞ்ஞானப் பெரியார்கள்

சி. சண்முலிங்கம்

ஆதியில் ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னர் மனிதன் ஆடையின்றி, இருக்க இல்லமின்றி, உணவு தேடி உறைவிடந்தேடி மிருகங்கள் போல வாழ்ந்தானெனவும், தனது கைகளும் கால்களுமே உதவியாகக் கொண்டான் எனவும் கூறப்படுகின்றது, ஆயினும் சில நூற்ருண்டின் பின்னர் விஞ்ஞான முன்னேற்றத்தின் பயனுய் உடை, உணவு, உறைவிடம், நோய்களைத் தீர்த்தல், போக்குவரத்து வசதிகள் முதலிய துறைகளில் மனிதன் மிகவும் முன்னேறியிருப்பதைக் காண்கிருேம். விஞ்ஞான முன்னேற்றத்தின் பயனுய் அழகான வீடுகளில் வசித்து, அலங்கார உடைகளணிந்து, சுவையான உணவுண்டு. வாகனங்களில் சொகுசாகப் பிரயாணஞ் செய்து வாழ்வதோடமையாது மனிதன் பூவுலகத்தையன்றிச் சந்திர மண்டலத்தையும் வான வெளியிற் தோன்றும் ஏனைய மண்டலங்களையும் அடைய ஆவல் கொண்டவனுய் முயற்சிக்கின்ருன். மனிதனின் இத்தகைய முன்னேற்றத்திற்காக உழைத்த விஞ்ஞானிகளிற் சிலராற்றிய தொண்டுகளைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

## தோமஸ் ஆல்வா எடிசன்

அமெரிக்காவிலுள்ள மிலான் நகரத்தில்ஒருவறிய குடும்பத்தில் 1847-ம் ஆண்டில் எடிசன் பிறந்தார். தனது பன்னிரண்டாம் வயதில் புகையிரத நிலையங்களிற் பத்திரிகை விற்றுச் சீவியம் நடத்திய வேளையில் ஒரு புகையிரத அதிகாரியின் குழந்தையின் உயிரைக் காப்பாற்றியதற்காக அவ்வதிகாரி எடிசனைத் தந்திப்பகுதியில் படிக்கவைத்தார். தந்திப்பகுதியிற் சிறந்து விளங்கிய எடிசன் கனடாவிலும், ஐக்கிய மாகாணங்களிலும் தந்திப்பகுதியிற் கடமையாற்றி தந்திப் பகுதிக்கு அளப்பரிய பணி புரிந்தார். தனது கூரிய நுண்ணறிவினுல் ஆயிரத்துக்கு மேற்பட்ட புதுப் பொருட்களைக் கண்டுபிடித்தார். மற்றும் கிராமபோன், எடிபோன், படக்கருவி, மின்சார விள

(5-ம் பக்கம் பார்க்க)

## திருத்தீபாவளி மலர்ந்ததம்மா!

— குமார் தனபால் —

வானத்துத் தேவரெல்லாம்
வாழ்த்துப் பாட
வையகத்து மாந்தரெல்லாம்
மகிழ்வில் துள்ள
சீனத்து வெடிஆர்த்து
ஒலித்தே ஓங்க
திருத்தீபா வளியிங்கு
மலர்ந்த தம்மா!

ஃ ஃ ஃ

செந்தமிழர் வாழ்வுக்கு
இனிமை கூட்டும்
சீரோடு மனையெல்லாம்
சிறக்கும் எல்லார்
சிந்தையிலும் தெளிவூறும்
தீமை யில்லா
தெய்வத்தின் அன்பினிலே
திளைப்பார் இன்றே!

எனக்கு
மிகவும்
பிரியமானது



CEYLON CHOCOLATES LTD

கன்டொஸ்


உயர்ந்த ரகச் சொக்கலேற்று




ஏகவிநியோகஸ்தர்கள்:
ஷோ வலஸ் அன் ஹெஜெஸ் லிமிட்டெட்,
கொழும்பு - 3.

RAVI

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மானிப்பாய் இந்துக்கல்லூரியிடம் ஸ்கந்தா தோற்றது

சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற முதலாம் பிரிவுக்கான சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் எதிர்பாராத விதமாக ஸ்கந்தா தோல்வியை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியின் ஆரம்பம் விறுவிறுப்பாக இருந்தபோதிலும், போகப் போக போட்டி சுவையற்றதாகக் காணப்பட்டது. போட்டி தொடங்கி பத்து நிமிடத்துக்குள் ஸ்கந்தா முன்னணி வீரர் இந்துக் கோலுக்குள் வெகு 'லாவக'மாக ஒரு கோலைத் தள்ளினுர். இதைத் தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கோஷ்டியைச் சேர்ந்த வீரர்களும் ஸ்கந்தா கோலுக்குள் பதிலாக ஒரு கோலை இறக்கி தமக்குக் கிடைத்த தோல்வியைச் சமப்படுத்திக் கொண்டனர்.

இதற்குப் பிறகு ஸ்கந்தா வீரர்களுடைய விளையாட்டு 'போர்' அடிக்கக் கூடிய விதத்தில் 'சப்' என்றிருந்தது.

இடைவேளைக்குப் பிறகு மானிப்பாய் இந்துக் கோஷ்டியினருடைய விளையாட்டு பார்ப்பதற்கு ரசிப்பாக இருந்தது. இந்து பின்னணி வீரர் ராஜேந்திரா திறமையான விளையாட்டினுல் ஸ்கந்தா கோலுக்குள் மீண்டும் இந்துக் கோஷ்டியினர் ஒரு கோலைத் தள்ளினுர்கள். இதனையடுத்தும் இந்துக் கோஷ்டியினர் ஸ்கந்தா கோலுக்குள் ஒரு கோலைத் தள்ளி தமது கோல்களின் எண்ணிக்கை மூன்ருக்கினுர்கள்.

ஸ்கந்தா முன்னணி வீரர்களுடைய விளையாட்டு நல்லாக இருந்த போதிலும் பின்னணி வீரர்களின் 'கார' மற்ற விளையாட்டினுல் தோல்வி கிடைத்ததென்றே சொல்லலாம். ஸ்கந்தா வீரர் தெய்வேந்திரத்தின் விளையாட்டு பார்ப்பதற்கு கவர்ச்சியாக விருந்தது.

உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு தீபாவளி விருந்தாக அமைந்த இந்தப் போட்டியில் ஸ்கந்தா கோஷ்டியை மானிப்பாய் இந்துக் கோஷ்டி 3—1 கோல்களால் தோற்கடித்தது.

—'ஆல்ரவுண்டர'

REGAL--JAFFNA
NOW SHOWING!
GUY WILLIAMS
in
CAPTAIN SINDBAD
(Wondrascope-Color)

## மகா வித்தியாலயம் வெற்றியீட்டியது

உடுப்பிட்டி, ஞாயிறு

கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி மூன்ரும்பிரிவுக் கோஷ்டிக்கும் நெல்லியடி அரசினர் மத்தியமகாவித்தியாலய மூன்ரும் பிரிவினருக்குமிடையே நெல்லியடி அரசினர் மத்திம்மகாவித்தியாலய மைதானத்தில்நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் நெல்லியடி அ. மத்திய மகாவித்தியாலயம் 5 கோல்களும் விக்கினேஸ்வரா 1 கோலும்பெற்றன. இப்போட்டிக்கு திரு. இரத்தினசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

நெல்லியடி அ. மத்திய மகா வித்தியாலயத்திற்கும் கனகரத்தினம் மகாவித்தியாலயத்திற்கும் (ஸ்ரான்லி) இடையே நெல்லியடியில்

(6-ம் பக்கம் பார்க்க)

## தீபாவளி . . .

(4ம் பக்கத் தொடர்ச்சி)

''எம்பெருமானே நான் இறக்கும் இந்த நன்னுளிலே உலகின்கண் தோன்றியமானிடர்கள் அதிகாலையிலேநித்திரைவிட்டெழுந்து நீர் மூழ்கி புத்தாடையணிந்து ஞானத்தீபங்களால்வீட்டை அலங்கரித்து இறைவன் அருள்பெற்றுஇன்புற்றிருக்க வேண்டும் பராபரமே என வேண்டினுன். கருணைவடிவான இறைவன் அவன் வேண்டிய வரத்தையருளி அவனைக்கொன்று மக்கள் துயர்களைந்தார் என்பது பழைய வரலாறு.

தீபாவளிப் பண்டிகையாகியஇன்னன்னுளிலே தீய செயல்களை அறவே யொழித்து அதர்மத்தின் வழியே சென்ருல் நரகாசுரன் பட்ட கதிதான் நமக்கும் என்ற தத்துவத்தையுணர்ந்து இன்புற்றிருப்பதையன்றி யாதொன்றும் அறியேன் பராபரமே என்று இறைவனிடம் வேண்டி சுற்றத்தவரையும் நண்பர்களையும் விருந்தோம்பி இன்புற்று மகிழ்வோமாக.

தழைத்துப் பூத்து தருமம் கனிந்து
விழவுகள் பாடி விருந்தோடும் உண்டு
முழவொலி மனைதோறும் முழங்கிடும் பண்டிகை
ஏழையென்றெவரும் ஏங்குதல் நீங்கி
மேழியின் சிறப்பில் செங்கோல் மின்னும்
வாழ்வினைக்காட்ட வருகுதே பண்டிகை
வாழிய பண்டிகை வாழிய உலகம்.

## விஞ்ஞானப் . . .

(4-ம்பக்கத்தொடர்ச்சி)

க்கு, புதியமுறை அச்சுத்தந்தி என்பனவும் இவரால் கண்டுபிடிக்கப்பட்ட சிலவாகும்.

இவர் தமது ஐம்பத்திரண்டாவது வயதில் அதாவது 1899-ம் ஆண்டில் எட்வின் எஸ்போட்டர் என்பவரின் உதவியுடன் முதன் முதல் ஒரு கதையைத் திரைப்படமாக்கி வெளியிட்டார். இன்று இவரது ஆராய்ச்சியின் பயனுகத் தந்திமுறைகளில் முன்னேற்றங்களுடன் வீடுகளில் மின்சார விளக்குகள்எரிகின்றன; விழாக்களில் ஒலிபெருக்கிகள் பாடுகின்றன; மக்கள் திரைப்படங்களைக் கண்குளிரப் பார்த்து [illegible] 1931-ல் காலமானர்.

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். சரோஜாதேவி யாழ்ப்பாண விஜயத்தின் போது பிடிக்கப்பட்ட புகைப் படங்கள் அனைத்தும் யாழ்ப்பாணம் ''சித்திராலயா'' ஸ்ருடியோவில் பெற்றுக் கொள்ளலாம். 1182

### வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணுனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

வெளிவேலை கவனிப்பதற்கு அனுபவம் வாய்ந்த ஆண், பெண் பிரதிநிதிகள் (Field Representatives) தேவை. மாதச் சம்பளமும் கொமிஷனும் கொடுக்கப்படும். 28-10-65க்கு முன் விண்ணப்பிக்கவும். சாலி கோப்பறேஷன், 30, 32, பேங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 1176

நெசவுத்தொழிலில் பயிற்சியுள்ளவர்கள் தேவை. அனுபவம், கோரும் சம்பளம் முதலானவை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். சாலி கோப்பறேஷன், 30,32 பேங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 1179

ஸ்ரோர் கீப்பர் உடனே தேவை. சம்பளம் ரூபா 150/- பிணைப்பணம் ரூபா 1500/- ரொக்கம் உடனே செலுத்தக் கூடியவர் 28-10-65க்கு முன் நேரில் வரவும். சாலி கோப்பறேஷன், 30, 32, பேங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 1178




## கொழும்பு
## செவ்வாய் 26-10-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 திரை இசை.

இரவு 6-45 குரல்வகை, 7-00 வயலின், 7-30 மத்தாப்பு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 9-45 நாதஸ்வரம்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**




கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)
தீவொளி (நுவரேலியா) ராஜா (யாழ்ப்பாணம்) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 10, 2, 6, 9-30 மணிக்கு

தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

'நான் ஆணையிட்டால்—அது நடந்துவிட்டால்—இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்''

எம். ஜி ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த

விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்ட்மென் கலர்)


# வர்த்தகக் கல்லூரி

பருத்தித்துறை

ஸ்தாபிதம்: 1924

கிளைகள்: 1. 40, சிவபுரி, திருகோணமலை.
2. அல்வாய் தம்பசட்டி ரோட் சந்தி, அல்வாய்.

### உபகாரக் கல்வி

கீழ்க்காணும் பாடங்களில் (தமிழ்-ஆங்கிலம்) ஒரு வருடத்திற்கு ஒவ்வோர் பாடத்திற்கு இருவருக்கு இலவசக் கல்வி அளிக்கப்படும். மாணவ, மாணவிகள், ஒரு பாடத்திற்கு மேற்பட்ட பாடங்களுக்கு உபகாரக் கல்விக்கு மனுச்செய்யலாம். ஆனுல் ஒரு பாடத்திற்கு ஒரு ரூபா வீதம் பிரவேசக் கட்டணம் விண்ணப்பத்துடன் அஞ்சல்கட்டளை மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் பத்திரம் மேற்படி கல்லூரியில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மாணவ, மாணவிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சை ஒன்று மேற்கண்ட கல்லூரியில் நடைபெறும். இப்பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறுபவர்களுக்கு மாத்திரமே இலவசக் கல்வி வழங்கப்படும். உபகாரக் கல்வி பயிலத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 31-10-65.
பரீட்சைத் திகதி: 20-11-65.
வகுப்புகள் ஆரம்பம்: 1-1-66.
இலவசக் கல்வி வகுப்பு: க. பொ. த. ப. (சாதாரணம்)

| பயிலும் பாடங்கள் | பரீட்சைக்குரிய பாடங்கள் | |
|---|---|---|
| 1. தூய கணிதம். | 1. தூயகணிதம் | (தமிழ் ஆங்கிலம்) |
| 2. பௌதிகம், இரசாயனம், உயிரியல். | 2. பொதுவிஞ்ஞானம். | ,, |
| 3. கணக்குப் பதிவியல், எண்கணிதம், வர்த்தக கணிதம். | 3. எண்கணிதம். | ,, |
| 4. சுருக்கெழுத்து (பிட்மன்), வர்த்தகம், பொருளாதாரம். | 4. வியாசம். | ,, |
| 5. சிங்களம் (மேற்பிரிவு). | 5. சிங்களம். (கீழ்ப்பிரிவு). | |
| 6. தையல் யந்திரப் பூவேலை, விஞ்ஞான முறைப்படி சட்டை வெட்டுதல். | 6. தையல். | |

வே. வா. வேலுப்பிள்ளை
F. C. T. S. (Eng), F. C. I. (B'ham), F. I. B. (Lond) (F. C. T. (Balh) ect.
நிர்வாகி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “சர்வதேச ஒத்துழைப்பு மூலமே சமாதானம் அணுகுண்டு அபாயம் ஆயுத பரிகரணத்தை வற்புறுத்துகிறது”

## யுதாண்ட் ஐ. நா. தின செய்தி

நியூயோர்க், அக். 24

“குறுகிய சுயநலம், தேசீய வாதம், வெறித்தன்மை ஆகியன சமாதானத்துக்கு ஆபத்தாக விளங்குகிறது என்றும், அழிவுக்கொள்கைகளைக் கையாண்டு பொறுப்பின்றி தப்பிவிடலாம் என்ற மனப்பான்மை இன்னும் ஆபத்தை விளைவிக்கும் என்றும் தலைமைக் காரியதரிசி யுதாண்ட ஐ. நா. 20-ம் ஆண்டு பூர்த்தித்தினம் சம்பந்தமாக விடுத்துள்ள செய்தியில் கூறியிருக்கிறார்.

“ஒரு நாடு அல்லது ஒரு கோஷ்டி மற்றொன்றின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. பரஸ்பர கூட்டுறவு, சர்வதே ஒத்துழைப்பு ஆகியனவே சமாதானத்திற்குத் தூண்டுதல் செய்யும். அப்போதுதான் மக்களின் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்த முடியும்” என்றும் அவரது செய்தி கூறுகிறது.

“சென்ற ஆண்டு ஏற்பட்ட முட்டுக்கட்டைகளுக்குப் பின் பொதுச்சபை இப்போது நம்பிக்கையுடன் செயலாற்ற ஆரம்பித்திருக்கிறது. புதிய தகராறு காரணமாக ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இப்போது 5 நாடுகள் அணு ஆயுதம் பூண்டிருக்கின்றன. வேறு நாடுகளும் இவற்றைச் செய்யமுடியும் என்ற உணர்வு ஆயுத பரிகரணத்தை மேலும் வற்புறுத்துகிறது” என்றும் யுதாண்ட் கூறியிருக்கிறார்.

### பிரதமர் செய்தி

இன்று பார்லிமெண்ட் வளவில் நடைபெற்ற ஐ. நா. கொடியேற்ற வைபவத்தில், இலங்கை ஐ. நா. வில் நம்பிக்கை வைத்திருக்கிறதென்றும், ஐ. நா. கடந்த 20 ஆண்டுகளில் உலகில் யுத்தங்களைத் தவிர்த்திருக்கிறது என்றும் பிரதமர் டட்லி சேனநாயகா பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு ஐ. நா. தினம் விசேஷ முக்கித்துவம் பொருந்தியதென்றும், ஏனெனில் இந்த ஆண்டை சர்வதேச ஒத்துழைப்பு ஆண்டாக இலங்கை அனுசரித்து வருகிறதென்றும் பிரதமர் கூறினார்.

ஐ. நா. அங்கத்தினர் தொகை இரு மடங்குக்கு மேல் அதிகரித்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்றும் சமாதானம், பசி, பிணி ஆகியவற்றை ஒழிக்க அது செய்துள்ள சேவை ஐ. நா.வின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்துகிறதுஎன்றும்பிரதமர்கூறினார்

## கிராம வாசிகளுக்கு ஆயுதங்கள்

புதுடில்லி, அக். 24

பாகிஸ்தான் எல்லையை அடுத்துள்ள 125 கிராமங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட கிராமவாசிகளுக்கு ஆயுதங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

## அல்ஜியர்ஸ் மகாநாடு 21 ஆபிரிக்க நாடுகள் தயார்

ஆக்ரா, 24

21 ஆபிரிக்க நாடுகள் வருகிற நவம்பர் 5-ம் திகதி அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்திருக்கின்றன. சீனு, பாகிஸ்தான், வடவியட்னும் கம்போடியா ஆகியநாடுகள் மட்டுமே மகாநாட்டை ஒத்திவைக்க வேண்டுமெனக் கூறியுள்ளன. துருக்கி, ஜோர்டான், சிரியா ஆகிய நாடுகள் மகாநாட்டில் பங்கு கொள்ள விருப்பம் தெரிவித்திருக்கின்றன.

## 4 இந்திய கப்பல்களை காணேம்

புதுடில்லி, அக். 24

சௌராஷ்டிரா கடற்கரையிலிருந்து பாஸ்ராவுக்கு சென்ற 5 இந்தியக் கப்பல்களில் 4 காணப்படவில்லை என்றும், ஐந்தாவது கப்பல் பாஸ்ராவில் இந்தியாவுக்கு பேரீச்சம் பழங்களை ஏற்றிக்கொண்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. இந்த 4 கப்பல்களையும் தேடிக் கண்டுபிடிக்குமாறு எல்லா கப்பல் கம்பெனிகளும் உஷார்ப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வியட்னுமில்

## 1,50,000 அமெரிக்க துருப்புகள்

சைகோன், அக். 24

தென்வியட்னுமில் புதிதாக இப்போது வந்துசேர்ந்திருக்கும் அமெரிக்கத் துருப்புக்களுடன் மொத்தம் 150000 அமெரிக்கத் துருப்புக்கள் இருக்கின்றன.

## செவ்வாய்முதல் மூடப்படும்

கராச்சி, அக். 24

கோலாலம்பூரிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனும் கராச்சியிலுள்ள மலேஸிய ஹைகமிஷனும் வருகிற செவ்வாய்க்கிழமை முதல் தங்கள் அலுவல்களை நிறுத்திக்கொள்ளும். கோலாலம்பூரில் பாகிஸ்தானியர் நலன்களை ஸவூதி அரேபியாவும், கராச்சியில் மலேசியர் நலன்களை தாய்லந்தும் கவனித்துக்கொள்ளும்.

## சீன-ஜாகர்த்தா உறவு நெருக்கடி

ஜாகர்த்தா, அக். 24

இந்தோனேஷியா வுக்கும் சீனவுக்கு மிடையேயான உறவு நெருக்கடியான கட்டத்தை அடைந்திருப்பதாய் இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ கூறினர்.

## தொழிற்சங்க சம்மேளன மகாநாடு

உடுப்பிட்டி, திங்கள்

இலங்கைதொழிற்சங்கசம்மேளனத்தின் 25-வது ஆண்டு விழாவைக் கொண்டாடுமுகமாக வடமாகாணத்திலுள்ள சகல தொழிற்சங்கங்களும்கூடி அதற்கான நடிவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன என்றும் யாழ்ப்பாணத்தில் ஓர் மகாநாடும் பொதுக்கூட்டமும் நடத்துவதற்கான ஏற்பாடுகள்செய்யப்பட்டு வருவதாகவும் இலங்கை தொழிற்சங்க சம்மேளன வடமாகாணப்பிரதிநிதி திரு. பொன்னையாதெரிவித்தார்.

காங்கேசன்துறை ஐக்கிய சிமெந்துத்தொழிலாளர் சங்கம், இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம், பரந்தன் இராசயனத் தொழிலாளர் சங்கம், ஐக்கிய இலங்கைப் பீடித் தொழிலாளர் சங்கம் ஆகியனகொண்ட கூட்டுக் கமிட்டி வருகிற மாதம் 29-ம் திகதி வடபகுதியில் நடைபெறவிருக்கும் மாநாட்டுக்கான தயாரிப்புக் கூட்டத்தை நடாத்துமெனத் தெரிகிறது.

## தென்னுபிரிக்காவில் கென்னடி உரைநிகழ்த்துவார்

வாஷிங்டன், அக். 24

காலஞ்சென்ற அமெரிக்க ஜனுதிபதியின் சகோதரரும், முன்னுள் அட்டோர்ணி ஜெனரலுமான திரு. ரூபேர்ட் கென்னடி தென்னுபிரிக்காவில் பல இன மாணவர் இயக்கக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்துவார். அங்கு உரை நிகழ்த்தத் தாம் ஒப்புக் கொண்டுள்ளதாக அவர் ஊர்ஜிதம்செய்தார்.

(பி. டி. ஸி.)

## நாட்டிலும் நகரிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கிறது. அதாவது அங்குள்ள ரயில்வே ஸ்டேஷன் பெயர்ப் பலகையில் தமிழில் தம்பலகாமம் என்றும் சிங்களத்தில் ‘தம்பலகமுவ’ என்றும் இனிமேல் எழுதப்படும். ஆங்கிலத்தில் என்னமாதிரி பெயர் வைப்பார்களோ தெரியவில்லை. நூற்றுக்கு நூறு தமிழ்ப் பிரதேசமான தம்பலகாமத்தை இப்பொழுது ஏன் ‘தம்பலகமுவ என்று மாற்றவேண்டுமென்று புரியவில்லை. தம்பலகாமம் என்ற பெயர் சிங்களவர்களின் வாயில் வரமாட்டாதோ? அல்லது வேறேதாவது காரணங்கள் இருக்கக்கூடுமோ?

தேசிய அரசாங்கம் ஒன்று ஏற்பட்டிருக்கும் இதேசமயத்தில் தேசிய ஒற்றுமைக்கு மாறுன பெயர் மாற்றங்களைச் செய்யவேண்டியது என்னத்திற்காக என்று விளங்கவில்லை. இவ்வளவு காலமும் தம்பலகாமம் தம்பலகாமமாகவே இருந்துவந்து இப்பொழுது ‘தம்பலகமுவ’ என்று மாற்றப்படுவது தேசிய ஒற்றுமைச்சிதைவையல்லவா குறிக்கும்?

சிங்களப் பெயர்களாளுலுஞ்சரி அவை அவை இருந்தபடியே இருந்து விட்டுப் போகட்டுமே! ஏன் இந்த [illegible]

— வழிப்போக்கன்

வடபகுதி அசைஸ விசாரணை

## “கொலை செய்யும் எண்ணத்துடன் இரண்டாம் எதிரி தாக்கவில்லை”

### பரந்தன் கொலை வழக்கு தொகுப்புரை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செவ்.

“இந்த நீதிமன்றத்தைத் தவிர வேறு எவர் முன்னிலையிலும் சாட்சியமளிக்கையில் விஜயமணியைப்பற்றிச் சொல்லவில்லை. அவரைப்பற்றி அவர்கள் எதுவும் கேட்காததாலேயே நான் ஒன்றும் கூருது விட்டேன். இங்கு அவரைப்பற்றிக் கேட்டதனுல், சொன்னேன்”.

பரந்தன் கொலை வழக்கு நான்காவது தினமாக நேற்றுக்காலை நீதியரசர் ஏச். டபிள்யூ. தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வழக்கறிஞர்திரு. ரி. கணேசலிங்கம் கேட்ட கேள்வியொன்றுக்கு முனியம்மா மேற்கண்டவாறு பதிலளித்தார்.

முன்னர் சாட்சியமளித்த முனியம்மா மீண்டும் சாட்சியமளித்தபோதே திரு. கணேசலிங்கம் குறுக்கு விசாரணை செய்தார்.

1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் தேதி இரவு 8 மணிக்கு பரந்தனைச் சேர்ந்த கறுப்பண்ணன் முத்துசாமி என்பவரை அதே இடத்தைச் சேர்ந்த அப்பாக்குட்டி இராசரத்தினம், காசித்தம்பி நடராசா ஆகிய இருவர்மீதும் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

பொலிஸ் சார்ஜண்ட் கான், திடீர்மரணவிசாரணை அதிகாரி எஸ். கனகரத்தினம், ராஜசிங்கம் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

### தொகுப்புரை ஆரம்பம்

இரண்டாம் எதிரியின்சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. வி. என். நவரத்தினம் தொகுப்புரை நிகழ்த்தினர்.

“முனியம்மாவின் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்திலிருந்தபோதிலும், இறந்தவர்மீது இரண்டாம் எதிரி தாக்கியதாகக் கூறப்படுவதை நாம் சற்றுக் கவனிக்கவேண்டும். இரண்டாம்எதிரி தாக்கியதனுல் ஏற்பட்ட காயம் சிறிது. எனவே அவர் கொலைசெய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் அவரைத் தாக்கவில்லை என்பது புலனுகிறது” என்று திரு. நவரத்தினம் தமது தொகுப்புரையின் போது சொன்னுர்.

முதலாம் எதிரி சார்பில் திரு. ரி. கணேசலிங்கம் வழக்கறிஞர் திரு. வி. என். நவரத்தினத்தின் உதவியுடனும், தளையசிங்கம் யோகநாதனின் அனுசரணையுடனும் ஆஜரானுர். இரண்டாம் எதிரி சார்பில் திரு. வி. ன். நவரத்தினம் தளையசிங்கம் யோகநாதனின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

மீண்டும் தொகுப்புரை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

## இந்துசமய வகுப்புகள் நடத்துபவருக்கு நிதிஉதவி

### 20,000 ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது

பம்பலப்பிட்டி, திங்கள்

1964-65-ம் நிதி ஆண்டில் பாடசாலைகளின் நேரசூசிக்குப் புறம்பான நேர இந்துசமய வகுப்புக்களை நடத்தி வந்தவர்கள் அவ்வகுப்புகளை மேலும் நடத்த உதவுமுகமாக அரசாங்கத்தால் இருபதாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வகுப்புகளை மேலும் நடத்துவதற்கு, அரசாங்கம் ஒதுக்கிய இப்பணத்திலும் உதவி தேவைப்படுவோர் அதற்காக விண்ணப்பம் செய்யலாம் என்றும் பாடசாலைகளில் பிள்ளைகள் எவ்வாறு தரத்துக்கேற்ப வெவ்வேறு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு, வெவ்வேறு ஆசிரியர்களால் பயிற்றப்படுகிறுர்களோ அதுபோன்று இவ்வகுப்புகளும் பிரிக்கப்பட்டு வெவ்வேறு ஆசிரியர்களால் பயிற்றப்படுபவையாய் இருத்தல் வேண்டும் என்றும் இந்துசமய ஆலோசனைச்சபை தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வகுப்புக்கும் வெவ்வேறு இடாப்பு வைத்துப் பிள்ளைகளின் வரவு அதில் தவருது பதியப்பட்டிருத்தல் வேண்டும் எனவும் கலாச்சார அதிபரின் பிரதிநிதியோ அல்லது இந்துசமய ஆலோசனைச் சபையின் பிரதிநிதியோ, இவ்வகுப்புகளையும் இடாப்புகளையும் பார்வையிடுவாக் எனவும் மேலும் தெரிவிர்கப்பட்டுள்ளது.

இவ்விதிகளுக்கமைய வகுப்புகளை இலங்கையில் நடத்தி வருவோர் இந்து சமய ஆலோசனைச்சபைச் செயலாளருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மகாவித்தியாலயம் ....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற போட்டிகளில் மேற்படி கல்லூரிகளின்3-ம், 2-ம் பிரிவினர்கள் முறையே கலந்து கொண்டனர். 3-ம் பிரிவினருக்கான போட்டியில் 3 கோல்களால் நெல்லியடி வெற்றியீட்டியது. ஸ்டான்லி மத்திய மகாவித்தியாலயத்திற்குக் கோல்களே இல்லை. 2-ம் பிரிவினருக்கான போட்டியிலும் 2 கோல்களால் நெல்லியடி வெற்றியீட்டியது. ஸ்டான்லி ஒரு கோலும் பெறவில்லை. இப்போட்டிகளுக்கு மத்தியஸ்தராக நெல்லியடி அ. ம. ம.வித்தியாலய உடற்பயிற்சி ஆசிரியர் திரு. எஸ். கதிர்காமத்தம்பி கடமையாற்றினுர்.

## ஐந்தாண்டு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்றுமதிப்பொருட்களானதேயிலை, ரப்பர் தெங்குப்பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்திப் பெருக்கத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவிருக்கிறது.

## சாஸ்திரி

போர் நிறுத்தத்திற்குப் பின் பாகிஸ்தான் தாக்குதல் நடத்துவதை ஒடுக்கும் உரிமை இந்தியாவுக்கு உண்டா இல்லையா என்பதை பாதுகாப்பு சபை தெளிவாகக் கூறவேண்டும் என்று சாஸ்திரி கூறினுர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org